This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# பிரயாணம்

www.writersujatha.com

நாடகத்தின் மேடை ஒரு இரண்டாம் வகுப்பு ரெயில் பெட்டி, இரண்டு ஜன்னல்கள் எதிரே.

இருபுறங்களும் இரண்டு ஸீட்டுகள். இரண்டு மேல் பர்த்கள்.

பிரவேசம் முழுவதும் பின் வலது பின் இடது புறங்களில்.

திரை விலகும்போது போலீஸ் விசில் ஒலி கேட்கிறது. வெளியில் இருந்து ஜன்னல் வழியாக கருகிய நீலவானம் தெரிகிறது. பதுங்கி, குனிந்து இருவர் பிரவேசிக்கின்றனர் – பெர்னார்ட்டும், பாலாவும்.

பாலா : பெர்னாட், எட்டிப் பாருடா.

பெர்னார்ட் : (ஜாக்கிரதை எட்டிப் பார்த்துவிட்டு) போய்ட்டான் பாலா, நாம இங்கே பதுங்கினதை பார்க்கலை.

பாலா : சரியாப் பாருடா.

பெர்னார்ட் : வேற எவனையோ துரத்திக்கிட்டு ஓடறான் பாலா. போய்ட்டான் நெருப்புக் குச்சி மாதிரி இருந்துகிட்டு என்ன ஓட்டம் ஓடினான்!

பாலா : எடுறா பர்ஸை!

பெர்னார்ட் : தன் இடுப்பில் சொருகியிருக்கும் பர்ஸை எடுக்கிறான்.

பாலா : எத்தனை இருக்கு.

www.writersujatha.com

பெர்னார்ட் : எண்ணுகிறான். தடுமாறுகிறான்.

பாலா : கொடுடா பேபாஸி! என்கிட்ட கொடுடா உனக்கு மூணுக்கு மேலே எண்ண வராதே. (பர்ஸைப் பிடுங்கி எண்ணுகிறான்) மூணு ரூவா பாஞ்சு பைசா, சாமியர் படம், லாட்டரி டிக்கட்டு, கலாவதியானது. (இருவரும் ஸீட்டில் எதிர் எதிரே உட்காருகிறார்கள்) டேய் எவனைப் பார்த்துடா பிக்பாக்கெட் அடிச்ச நீ?

பெர்னார்ட் : நீ தள்ளி விட்டயே அந்த ஆள்தான் பாலா. சில்க் சட்டை எல்லாம் போட்டுகிட்டிருந்தானே. சோக்காதானே இருந்தான்.